கோலாலம்பூர், ஜூன் 30-
நாளை ஜூலை முதல் தேதி தொடங்கி, 1987 ஆம் ஆண்டு சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் புதிய அபராதக் கட்டணங்களின் அமலாக்கத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அறிவித்துள்ளது.


பக்கம் 13




# நாளை முதல் அபராதக் கட்டணம் அதிகரிப்பு

முதல்பக்கத் தொடர்ச்சி...

## நாளை முதல்....




கூடுதல் தொகையைச் செலுத்துவதை தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே தங்களின் அபராதங்களை செலுத்திவிடும்படி சம்மன்களைப் பெற்றுள்ள வாகனமோட்டிகளுக்கு அது நினைவுறுத்தியுள்ளது.

சாலை போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் விதிக்கப்படும் அபராதத் தொகை குறித்து கோலாலம்பூர் மாநகர் மன்றம் புதிய விதிமுறையை அமல்படுத்துகிறது. இது தொடர்பான அறிக்கை நேற்று வெளியானது.

மோட்டார் சைக்கிளோட்டிகளுக்கான அபராதத் தொகை, சம்மன் கொடுக்கப்பட்ட முதல் 15 நாட்களுக்குள் செலுத்தினால் 30 வெள்ளி. பதினாறு (16) முதல் 30 நாட்கள் என்றால் 50 வெள்ளி. அதற்கு மேல் தாமதமானால், 31 முதல் 60 நாட்களுக்குள் என்றால் 80 வெள்ளி செலுத்தியாக வேண்டும்.

காருக்கான அபராதத் தொகை: முதல் 15 நாட்களில் 50 வெள்ளி. பதினாறு (16) முதல் 30 நாட்கள் என்றால் 80 வெள்ளி, 31 முதல் 60 நாட்கள் என்றால் 100 வெள்ளியாக செலுத்த வேண்டியிருக்கும்.

அதே சமயத்தில், கனரக வாகனங்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை முதல் 15 நாட்களில் 200 வெள்ளியாக செலுத்த வேண்டியதாக இருக்கும். 16 முதல் 30 நாட்கள் என்றால் 250 வெள்ளியாகவும் 31 முதல் 60 நாட்கள் என்றால் 300 வெள்ளியாகவும் செலுத்த வேண்டும். இந்த அபராதத் தொகைக் கட்டணம் நாளை மாநகரம் முழுவதும் அமலுக்கு வருகிறது.

